உ

இறைவன் துணை

140

28

# அரசியல் இயக்கம்

ஓர் இனிய செய்யுள் இலக்கியம்


1981

உ

இறைவன் துணை

# அரசியல் இயக்கம்

ஓர் இனிய செய்யுள் இலக்கியம்




ஆக்கியோனும், பதிப்பாளனும்

**திரு - அடிகளாசிரியன்**

சித்தநாதேச்சுராதீனம்

திருவருள் நிலையம், குகையூர்-606 306.

நயினார்பாளையம் வழி. தென்னார்க்காடு மாவட்டம்



1981

விலை 2-50

# அரசியல் இயக்கம்

## பாட்டின் அகரவரிசையும், எண்ணும்.


| | | | |
|---|---|---|---|
| அதுகுற்றம் | 37 | எங்களினம் | 45 |
| அரசியலிற் புக | 14 | எங்கெங்கே | 71 |
| அரசியல் உலகின் | 8 | எச்செயலைப் | 32 |
| அரசியற் சட்டம் | 43 | எத்தகை | 2 |
| அரசியலிற் பேரறிவு | 7 | எந்தவேலையை | 74 |
| அரசெனும் | 4 | என்னுடைய | 19 |
| அழுக்காறும் | 18 | எப்பொய்யை | 44 |
| அரசியலில் | 67 | ஒழுங்காக | 10 |
| அரசியலைச் | 55 | கட்சியொன் | 76 |
| அளவில் | 60 | கல்வியால் | 15 |
| இயற்கை | 21 | கல்வியினல் | 22 |
| இன்றி | 6 | கலியுகத்தை | 61 |
| உடலுழைத்து | 40 | கள்குடிப்பர் | 50 |
| உண்மையில் | 12 | கள்ளினைக் | 57 |
| உண்மையே | 20 | காதற் | 3 |
| உண்மையை | 56 | காமமென் | 46 |
| உயர்ந்தபண்பு | 16 | காலமாரி | 68 |
| உலகநலம் | 41 | குடியாட்சி | 58 |
| உள்ளமெலாம் | 31 | குற்றமே | 47 |
| உள்ளத்தை | 54 | கூற்றுவனும் | 79 |
| உழைப்பின் | 77 | கைக்கூலிக் | 65 |
| ஊர்தொறும் | 25 | கைப்பொருள் | 63 |

## பாட்டின் அகரவரிசையும் எண்ணும் (தொடர்ச்சி)


சிங்கத்தின் 35
செல்வமிருக்க 66
சொல்லாலே 38
தனக்கென 28
தாம்வாழ 17
தூயமனமும் 26
தேட்டினையே 52
நல்லவர்தம்நற் 11
நல்லவர்தம்திரு 73
நல்லன 1
நல்லவராய் 53
நாட்டிலேநண்ணும் 24
நாட்டிலேமக்கள் 34
நாட்டுப் 27
நாடோ 9
பண்ணுதற் 78
பலகோடி 75
பற்றற்றநல் 53
பற்றற்றநல்-பலர் 59
பிறர்வாழ 81
பிறருடைய 72
பொய்யதனை 42
பொய்யினில் 13
பொய்யதனோ 49
பொருளிலார் 69
பொருளெனப் 5
பொருட்பேய் 33
பொருள்விரும்பி 50
பொதுநலந் 62
பொறுப்பற்ற 80
மக்களினம் 39
மதுவினைப்போல 64
மிகப்பெரிய 70
முடியணி 29
முரசியலக் 36
வாழத்தெரியா 48
வினைதெரிந்து 30

# முன்னுரை

நாட்டிலே உள்ள பெருந்தலைவருள் மிக்க பெருந்தலைவன் அரசனாவான். அவன் பெருமித வாழ்க்கை உடையவன். அவ்வாழ்க்கையை உடையவனாக அவன் இருத்தலால் அடக்கமுடைமை முதலிய நற்பண்புகள் சில சமயத்தில் இல்லாமற் போய்விடும். அவை இல்லாமற் போனால் அரசனுக்கேயன்றி நாட்டிற்கும் கேடு விளையும். இந்த நிலையில் அவனுக்கு அறிவுரை வழங்கி அவனைத் திருத்த முயல வேண்டும். அவனை யார் திருத்த முயல்வர் எனின்? அந்நாட்டு அறிஞர் பெருமக்கள் ஆகிய புலவரே அச்செயல் செய்வர்.

அவர் அரசனுக்கு அறிவுரை வழங்கும் பொழுது அவனுடைய பெருந்தன்மைக்கு இழுக்கு வராமல் அவன் தனித்திருக்கும் செவ்வியறிந்து அவனது செவிக்கு மட்டும் கேட்கும்படி அறிவுரை வழங்கித் திருத்துவர். இதற்குச் செவிஅறிவுறூஉ என்று பெயர். இதனைத் தொல்காப்பியர் புறத்திணையுள், பாடாண் திணையுள்,

"வாயுறை வாழ்த்தும் செவிஅறி வுறூஉவும்
ஆவியின் வரூஉம் புறநிலை வாழ்த்தும்
கைக்கிளை வகையோடு உளப்படத் தொகைஇ
தொக்க நான்கும் உளவென மொழிப"

(தொல் - புறத்திணை - 37)

என ஓதுவாராயினர். இச் செவிஅறிவுறூஉவில் கூறப்படும் செய்தியை.

"செவியுறை தானே
பொங்குத லின்றிப்புரையோர் ஞாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தற்றே"

(தொல் - செய்யுளியல் - 110)

எனத் தொல்காப்பியரும்,

"மறந்திரி வில்லா மன்பெருஞ் சூழ்ச்சி
அறந்தெரி கோலாற் கறிய வுரைத்தன்று"

(புறப்பொருள் வெண்பாமாலை - பாடாண் 33)

என ஐயனாரிதனாரும் கூறுகின்றனர். இத்துறையுள் ஆங்காங்கே வரும் பாடல்களை எல்லாம் திரட்டி நோக்கினால் ஓர் அரசன் அரசியலில் மேற்கொள்ள வேண்டிய முறைகளெல்லாம் புலப்படும்.

அவற்றுள் ஓர் பாட்டினை எடுத்துக்காட்டுகிறேன் ;

“பல்யானை மன்னர் முருங்க அமருழந்து
கொல்யானை தேரோடு கோட்டந்து நல்ல
தலையாலங் கானம் பொலியத் தொலையாப்
படுகளம் பாடுபுக் காற்றிப் பகைளூர்
அடுகளம் வேட்டோன் மருக! அடுதிறல்
ஆளி நிமிர்தோள் பெருவழுதி! எஞ்ஞான்றும்
ஈரம் உடையையாய் என்வாய்ச்சொற் கேட்டி
உடைய உழவரை நெஞ்சனுங்கக் கொண்டு
வருகால் உழவர்க்கு வேளாண்மை செய்யல் ;
மழவர் இழைக்கும் வரைக்காண் நிதிஈட்டம்
காட்டும் அமைச்சரை ஆற்றத் தெளியல்;
அடைத்த அரும்பொருள் ஆறன்றி வெளவல்;
ஈகைப் பெரும்பொருள் ஆசையாற் சென்று
பெருங்குழிசி மன்றமறுக அகழாதி; என்றும்
மறப்புற மாக மதுரையார் ஓம்பும்
அறப்புறம் ஆசைப் படேற்க; அறத்தால்
அவையார் கொடுநாத் திருத்தி நவையாக
நட்டார் குழிசி சிதையாதி; ஒட்டார்
செவிபுதைக்கும் தீய கடுஞ்சொற் கவிபடைத்தாய்!
கற்றார்க் சினனுகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்
செற்றார்ச் செகுத்துச் சேர்ந்தாரை ஆக்குதி;
அற்றம் அறிந்த அறிவினாய்! மற்றும்
இவையிவை தீயா தொழுகின் நிலையாய்
பொருகடல் ஆடை நிலமகள்
ஒருகுடை நீழல் துஞ்சுவன் மன்னே”

(யாப்பருங்கலவிருத்தி - பக்கம் 213)

“மன்னனே! அன்புடையவனாய் என் வாய்ச்சொல்லைக் கேட்பாயாக நீ குடிமக்களாக உடைய உழவர் தம் பொருளை அவர் மனம் வருந்துமாறு அவரிடமிருந்து வாங்கிக் கொண்டு அதனை உன்னை நோக்கி வரும் இரவலர்க்குக் கொடுத்தல் செய்யாதே (வருகால் உழவர்-இரவலர்)

பேரர் மறவர் போரால் ஈட்டும், மலைபோன்ற பொருட்கூட்டத்தை உனக்கு முன் கொண்டு வந்து காட்டும் அமைச்சரை அறுதியாக நல்லவரென்று தெளியாதே ஒருவரிடத்தே உள்ள அரிய பொருள்களை அரசியல் நீதியாலன்றி நீ வலிந்து பறித்துக் கொள்ளாதே. ஈதலுக்குரிய பெரும் பொருளைப் பெற வேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்டுச் சென்று, உன் முன்னோரால் ஈட்டப்பட்டுச் சேம நிதியாக வைக்கப்பட்டிருக்கும் பொருள் நிறைந்த பெரும் பானைகளை உறுதியாக கெடுமாறு அகழ்ந்து கொள்ளாதே. மதுரை மக்கள் புறத்துறையால் பாதுகாத்து வைத்திருக்கும் அற நிலையப் பொருள்களை நீ பற்றிக் கொள்ள விரும்பாதே. அறங்கூற வையத்தார் நடுநிலை பிறழ்ந்து நீதி வழங்குவராயின் நீ அதனை அறத்தால் திருத்துவாயாக உன்னிடம் நட்புக் கொண்டவரின் சோற்றுப் பானையை (வாழ்க்கையை) சிதைத்து விடாதே. பகைவர் உன்னைப் பற்றிக் கூறும் செவியை மூடிக்கொள்ளத் தக்க தீய கடுஞ்சொற்களை கவியாகப் படைத்துக் கொள்பவனே. நீ கற்றவர் தம் கூட்டத்திற் சேர்ந்தவனுய்க் கல்லாதவரை நீக்கி ஒழுகி, பகைவரை அழித்து உன்னைச் சேர்ந்த நண்பரை ஆக்குவாயாக. நீ இவற்றையும் இவை போன்றவற்றையும் நீங்கா தொழுகின் யாரிடத்தும் நிலையாக நில்லாத நிலமகள் உன் குடை நிழலிலேயே உறைவாள்" என்பது மேற்பாட்டின் பொருளாகும். இங்ஙனம் செவியறிவுறூஉப் பாடல்களை எல்லாம் தொகுத்து நோக்கினுல் நமக்கு நல்ல அரசியற்செய்தி கிடைக்கும்.

யான் அவ்வப்பொழுது நம் நாட்டு அரசியற் சூழ்நிலைக்குத் தக, எனக்குத் தோன்றும் கருத்துக்களைப் பாட்டாகப் பாடுவேன். எடுத்துக் காட்டாக நம் நாடு உரிமை பெற வேண்டி நம் நாட்டு மக்களெல்லாம் கிளர்ச்சி செய்து வந்த பொழுது, நம் நாட்டிலேயே சிலர் ஆங்கில அரசுக்கு உறுதுணையாக இருந்து வந்தனர். அதனைக் கண்டு மனம் வருந்திய யான்

எச்சிலைத் தின்று நாளும்
எளியராய் வாழ்ந்திட் டாலும்
துச்சமாம் அடிமை வாழ்வைத்
தொலைத்தலே நன்று கண்பீர்க
பச்சிலைச் சோலை சூழும்
பங்களாத் தன்னில் வாழ்ந்தே
இச்சகம் பேசி என்றும்
ஏருேன அடிமை வாழ்வீர்!

என்ற பாடலை எழுதினேன். அதனைப் போலவே மக்களாட்சி நம் நாட்டிற்கு வந்த பிறகு அதனை நடத்தும் நல்ல தலைவர்கள், தீய தலைவர்கள், அரசியலின் இன்றியமையாமை, அதனை நல்ல முறையில் அமைத்துக் கொள்ள வேண்டி, அடிப்படையில் மக்களுக்கிருக்க வேண்டிய நல்லுணர்வு என்னும் இவைகளைப் பற்றிப் பல தனிப்பாடல் களை எழுதினேன். அவற்றை வகைப்படுத்தி ஒன்றுக்கி அரசியல் இயக்கம் என்ற தொகுப்பிலக்கியமாக இதனைத் தமிழகத்திற்குத் தருகின்றேன். தொகுப்பிலக்கியம் ஒருவர் பாடியது பலர் பாடியது என்று, இரு வகையாக இருக்கும். அவற்றுள் இது ஒருவர் பாடிய தொகுப்பிலக்கிய மாகும். இது பல காலத்தில் பலவகைப்பட்ட சூழலில் எழுதப்பட்ட தனிப் பாடல்களின் தொகுப்பாகையால் ஒரே கருத்துகள் வெவ்வேறு வடிவத்தில் பல இடங்களில் வந்திருக்கும். இது தொகை நூலின் இயல்பாகும். நாட்டு மக்கட்கு அரசியல் உணர்வை உண்டாக்க வேண்டும் என்ற உணர்வால் இத்தொகுப்பிலக்கியத்தை அச்சிட்டு வெளிப்படுத்துகிறேன்.

## தோன்றுத் துணை

யான் 1970 ல் தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரையை ஆராய்ந்து பலவகைக் குறிப்புடன் அச்சிட்டு வெளிப்படுத்தினேன் இப்பணி யான் அலுவலில் இருக்கும்பொழுது தொடங்கி ஒய்வு பெற்ற பின் முடிவுற்றது. கடைசியில் மேற் கண்ட நூலினை அச்சிட்ட அச்சகத்திற்குக் குறிப்பிட்ட பாக்கித் தொகையை என்னல் கொடுக்க முடியவில்லை, இதனைப் *பொள்ளாச்சி தொழில் அதிபர் மேன்மை தங்கிய* N. *மகாலிங்கம்* B. Sc, M. I. E. அவர்கட்குத் தெரிவித்தேன். உடனே அவர்கள் இத்தொகையை அச்சகத்திற்கு அனுப்பி விடுவதாகவும் மேற்கொண்டு தொல்காப்பியப் பகுதியை அச்சிடுவதாயின் அதற்கும் உதவி புரிவதாக 25—10—1971 ல் தெரிவித்தார்கள். என்னை அவர்கள் முன்பின் அறியாமலிருந்தும் அவர்கள் காலத்தாற் செய்த உதவி மறக்க முடியாதது. அவர்கள் தமிழ்த் தொண்டினை மிகவும் பாராட்டுகின்றேன்.

## உறுதுணை

எங்கள் பரம்பரை பலர்க்கும் ஆசிரியராக இருந்து தீட்சை முதலிய சமய போதனைகளைச் செய்து வரும் ஆசிரியப் பரம்பரையாகும். என்னிடம் தீட்சை செய்து கொண்ட பலருள், குளாநல்லி நடுப்பாளையத்திலிருந்து வந்து இப்போது ஈரோட்டிலிருக்கும் நிறைநாட் செல்வர்கள்

கு. சி. ஆறுமுக முதலியார், த. முத்துசாமி முதலியார், த. குழந்தையப்ப முதலியார் முதலிய மெய்யன்பர்கள் சிவபக்தியிற் குன்ருதவர்களாய் என்னிடம் அன்பு பூண்டு எனக்கு உறுதுணையாக விளங்கி வந்தனர் ; வருகின்றனர்.

அவர்களுள் த. முத்துசாமி முதலியாரின் இளைய நிறைநாட் செல்வர் மு. பாலசுப்பிரமணியம் என்பார் ஊக்கமும் நற்பண்பும் வாய்ந்த இளைஞராயுள்ளார். அவரிடம் யான் தொகுத்து வைத்திருந்த அரசியல் இயக்கம் என்ற என் தொகுப்பிலக்கியத்தைப் படித்துக் காட்டினேன். எழுச்சியான உள்ளம் படைத்த அவர் இவ்விலக்கியத்தை அச்சிட்டு வெளிப்படுத்துவது நல்லதென்று கூறித் தாம் இயக்கி வரும் ஈரோடு சக்தி அச்சகத்தில் அச்சிடலாம் என்பதையும் தெரிவித்தார்கள் அவர்களின் நல்ல முயற்சியால் இவ்விலக்கியம் அச்சாகி வெளிவருகிறது. தொண்டுள்ளம் படைத்த அவர்கட்கும் சக்தி அச்சகப் பணியாளர் அனைவருக்கும் என் உளங்கனிந்த வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருவருள் நிலையம்
குகையூர்
1—1—1981

இங்ஙனம்
திரு - அடிகளாசிரியர்
ஓய்வு பெற்ற தமிழ்ப்பேராசிரியர்

# நன்றி

மயிலம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி 14-7-1938ல் முதன்முதல்தொடங்கப்பெற்றது. அக்கல்லூரியில் முதல் தமிழ்ப்பேராசிரியனுகப் பணியேற்று ஏறக்குறைய பன்னிரண்டு ஆண்டு பணியாற்றினேன். 1950ல் தஞ்சாவூர் கரந்தைப்புலவர் கல்லூரிக்குத் தமிழ்ப்பேராசிரியனுகச்சென்றேன். அங்கு இருபது யாண்டு காலம் பணிசெய்துவிட்டு 1970ல் ஓய்வு பெற்றேன்.

ஏறக்குறைய முப்பத்திரண்டு யாண்டுகள் தமிழ்க்கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியனுகப்பணிபுரிந்த எனக்கு அப்பொழுதுள்ள விதி முறையின்படி கிடைத்த ஓய்வூதியம் இருபத்தொரு ரூபாய் எண்பத்தைந்து புதுக்காசுகளாகும். முப்பது ரூபாய்க்குக் குறைந்த ஓய்வூதியம் இல்லாமையால் மேற்கண்ட தொகையுடன் எட்டு ரூபாய் பதினைந்து புதுக்காசினைச்சேர்த்து முப்பது ரூபாயாக ஆக்கி எனக்கு கொடுத்தனர்.

முப்பத்திரண்டு யாண்டு காலம் தமிழ்க்கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியனுகப்பணிபுரிந்த எனக்குத் தொடக்கப்பள்ளியில் பணிபுரியும் லோயர் கிரேடு ஆசிரியர்க்குத்தரும் ஓய்வூதியமே கிடைத்தது. அது பத்து யாண்டு காலமாகச்சிறிது சிறிதாக வளர்ந்து இப்பொழுது நூற்றுப் பதினெட்டு ரூபாய் அளவில் உள்ளது.

தமிழ்நாட்டு அரசியலிலுள்ள சில அரசியல் தலைவருக்குத் தமிழ்ப் புலவரையே பிடிக்காது. சில அரசியல் தலைவர்க்கு இளையவராய்த் தங்கள் கட்சிக்கு உதவுபவராய் உள்ள தமிழ்ப்புலவரையே பிடிக்கும். முதிய கட்சிச்சார்பற்ற என் போன்ற தமிழ் புலவரைப்பிடிக்காது.

தமிழக முதலமைச்சராயிருக்கும் மாண்பு தங்கிய M. G. இராமச்சந்திரன் அவர்கள் குறைந்த வருவாயினையுடைய ஓய்வு பெற்ற முதிர்ந்த தமிழ்ப்புலவருக்கு ஒரு மூன்று யாண்டு காலம் திங்கள் ஒன்றுக்கு இருநூற்றைம்பது ரூபாய் கொடுப்பது என்ற அறத்திட்டத்தை உண்டாக்கினர். அத்திட்டத்தின் விதிமுறைப்படி நான் திங்கள் தோறும் இருநூற்றைம்பது ரூபாய் பெற்றுவருகின்றேன்.

சிலப்பதிகாரத்திற்குச் சிறந்த உரையை எழுதியவர் அடியார்க்கு நல்லார் என்ற முத்தமிழ்ப்புலவராவார் அவர் அச்சிறந்த உரையை

எழுதுவதற்கு உதவி புரிந்தவன் பொப்பண்ண காங்கேயன் என்ற வள்ளலாவான் அந்த உரையை எழுதி முடிக்கும் வரை அப்புலவருக்குக் குடும்பக்கவலையே சிறிதும் ஏற்படாதவாறு அவன் புரந்துவந்தான். அதனை உளங்கொண்ட அவர் "........பொப்பண்ண காங்கேயர் கோனளித்த சோற்றுச் செருக்கல்ல வோதமிழ் மூன்றுரை சொல்வித்ததே"

என்று பாடினர். நானும் இதனைப்போலவே, மாண்பு தங்கிய முதலமைச்சரவர்கள் எனக்குச்செய்த உதவி, குடும்பத்திற்கும் பொருளீட்டும் கவலையிற்புகாமல் தமிழிலக்கியங்களைப் படைப்பதிலேயே காலத்தைச்செலவிடுமாறு தூண்டிவிட்டது அதனால்

"கறுமை கொண்டு புறங்கூறிக்
கடுஞ்சொல் லாலே பழித்தாலும்
பொறுமை கொண்டு நலத்தினையே
புரியும் இராமச் சந்திரனைச்
சிறுமை மிகுந்த இவ்வுலகின்
சீர்கே டறிந்தே எவ்வெவர்க்கும்
வறுமை நீங்க உதவுகின்ற
வள்ளல் என்றே வாழ்த்துவனே

என்று வாழ்த்துக்கூறி, அவர்கட்கு நன்றி செலுத்துகின்றேன்.

இங்ஙனம்
திரு - அடிகளாசிரியர்
ஓய்வு பெற்ற தமிழ்ப்பேராசிரியர்

திருவருள் நிலையம்
குகையூர்
1—1—1981

இறைவன் துணை

# அரசியல் இயக்கம்

## கடவுள் வாழ்த்து

1 நல்லன வெல்லாம் நாட்டினில் வளர
நாடொறும் உதவியை உதவி
அல்லன வற்றை முளையிலே அழிக்கும்
அரசையே ஆக்கிட வேண்டும்;
வல்லவர் எவர்க்கும் வல்லவ ளுகி
வானகம் மண்ணக மெல்லாம்
பல்வகை யான நலத்துடன் இயங்கப்
பண்ணும் இறைவனே! போற்றி

2 எத்தகை யான செயலையும் இயற்ற
இறைவனே! உன்னருள் வேண்டும்;
உத்தியிற் சிறந்த பெரியரும் சிறிய
ஒருசெயல் செய்யமாட் டாமல்
இத்தரைக் கண்ணே இருப்பதும், சிறியோர்
இருஞ்செயல் புரிவதும் கண்டோம்;
உத்தம! அத்த! உலகிடைச் சிறியேன்
உயர்நலப் பணிசெய உதவே.

## கவிஞர்க்கு அறிவுறுத்துதல்.

3 காதற் பாட்டையே பாடிடக்
கருதிடும் கவிஞரே! உம்பாட்டால்
ஏதம் நல்குறு காமமே
எழுந்திடும்; எழின்மறு தலையாக

---

குறிப்பு : 2 இருஞ்செயல் - பெரிய செயல் **3** ஏதம்-துன்பம்

ஓது கின்றதீ வெகுளியும்
உதித்திடும்; உற்றஇவ் விரண்டாலே
தீது தோன்றுமே! தீமையை
விலக்கிடத் தெரிந்துநீர் பாடீரே.

## நூல்

# I அரசின் இன்றியமையாமை

## அரசு ஓர் தெய்வம்

4 அரசெனும் ஒன்று, நல்லற நெறியில்
அமைவுற மக்களை இயக்கிக்,
கரவொடு பொய்ம்மை கொலைகள வாகும்
களை களை அடியொடு களைந்து,
விரசிடு பசியை வறுமையை நோயை
விரைவினில் நலம்வர விலக்கி,
உரசிடும் பொருளை மக்கள்எல் லோரின்
உழைப்பினுல் வளர்க்குமோர் தெய்வம்

5 பொருளெனப் படுவ தகத்திணை என்பர்
போர்வினை புறத்திணை என்பர்
அருளினிற் சிறந்த வள்ளுவன் மட்டும்
அரசியல் பொருளென அறைந்தான்
இருளிடை உழலும் மக்களுக் கெல்லாம்
எரி சுடர் விளக்கினைப் போலத்
தெருள்தர வாழும் நெறியினைக் காட்டும்
தெய்வமே அரசிய லன்ரூே?

## மக்களாட்சியில் அரசியலை நடாத்தும் பொறுப்பிற்கு உரியவரை தேர்ந்தெடுக்கும் பொழுது, தீயவர் நல்லோரைத் தள்ளிவிட்டுத் தாமே முன் வந்துவிடுவர்

6 இன்றி யமையாமல் எவர்க்கும் பயன்படும்
அரசியற் பொறுப்பினை மக்களின் தேர்வினுல்
அடைந்து நின்றே அரசியல் நடாத்துநர்
பொருமை யின்றிப் பொறுமை யினராய்

---

4 உரசு - வலிமை விரசிடும்-கலந்திடும்

மடிமை யின்றி முயற்சி யினராய்
மருண்மை யின்றித் தெருண்மை யுடையராய்
பொய்ம்மை யின்றி மெய்யுரைப் பவராய்
கடுஞ்சொல் லின்றி இன்சொல் லினராய்
மறச்செய லின்றி அறச்செய லுடையராய்
இன்பம் விழையாமல் வினைவிழை பவராய்
அன்பும் ஆர்வமும் அருளும் சிறக்கும்
அறிவுடை மாந்த ராயின், அரசியல்
அரும்பயன் நல்கி ஆக்கமொடு சிறக்கும்;
அத்தகை அறிஞரை அணுக விடாமல்
பொய்க்கற் பனையால் புறம்பழித் துரைத்து
மக்கள்தம் கருத்தினை மாற்றி வோட்டால்
கோமா ளிகளும் கொள்ளைக் காரரும்
அரசியற் பொறுப்பில் அமர்ந்து விட்டால்
எள்ளி நகைக்கும் பேதைமைக் கிடனாய்
அரசியல் நடைமுறை ஆகுத லன்றி
நாட்டுப் பணிக்காம் நல்ல பொதுப்பொருள்
தன்னல எண்ணம் தழைத்த அவர்தம்
வீட்டுப் பணிக்கே விரைந்து சென்றிடும்
பொதுநலம் செய்யப் போம்பொரு ளெல்லாம்
தன்னலத் திற்கே தடையறச் செல்லின்
வறுமையும் துன்பமும் வளர
நாடு நலனிழக்கும் நாடுவார் யாவர்?

---

6 மடிமை-சோம்பல் ''இன்பம் விழையாமல்'' என்னுமிடத்தே ''இன்பம் விழைவான் வினைவிழையான் தன் கேளிர் துன்பம் துடைத்தூன்றும் தூண்.

## மக்களாட்சியில் அரசியலுக்கு மக்கள் செய்ய வேண்டிய கடமை

7 அரசியலிற் பேரறிவு, ஆக்கத்தில் எண்ணம்,
அவ்வவர்தம் திறமறிந்து நடக்கின்ற ஆற்றல்,
பரசியலப் புகழ்ந்துரைத்துப் பிறர்தம்மைப் பழிக்கும்
பண்புடையோர் சொல்வலையில் படாதிருக்கத் தெரிதல்,
கரவியலும் வஞ்சகங்கள் களவுகொலை களிலே
கன்றிநிற்கும் தீயரோடு கலவாம லிருத்தல்,
திரமுடைய இப்பண்புத் திறமுடையோர் தம்மைத்
தேடிவந்து பொதுப்பணியில் திணித்தல்மக்கள் கடனே.

## அரசியலில் பல துறை அலுவலகங்களில் பணிபுரிவோர்

8 அரசியல் உலகின் அரியநல் லுயிராம்
அதுநன் கியலின் ஆக்கம் பெருகும்
ஆக்கம் பெருக்கும் வழியினை உரைப்பின்
அரசியல் துறையுள் தலைமை தாங்கி
இயக்கிடு பவரும், இவர்தம் கீழே
அலுவல்செய் குநரும் அகம்ஒன் றாகி
பொதுநலம் என்னும் புண்ணியம் புரியும்
நன்னெறி யாளராய் நடந்து நிற்பின்
நாடு வளத்தால் நனிசிறந் தியலும்
அங்கன மின்றி,
இருவரும் ஊழல் புரிவதில் ஒன்றாய்
தன்னல மென்னும் தகுதியில் லாத
பாவச் செயல்புரி பாவிய ராகில்
அவர் வாழ்ந்திருப்பர்; அவனி நலங்கெடும்
இதுவும் இலாமல்
இருவரும் மாறாய், ஒருவர்தன் நலமும்
மற்றவர் பொதுநல மாண்பும் உடைய ரேல்
அலுவ லகச்செயல் அனைத்தும் குழம்பும்
அதனால்,

அரசியற் றுறையுள் அமைவுறும் அலுவலர்
பொதுநல விரும்பும், புண்ணிய ராயின்
புகழ்ந்துப் போற்றிப் பொருத்துக அலுவலில்
தன்னலம் விரும்பும் பாவிய ராயின்
தாழ்த்தி போக்குக தகுதி சான்ற
இச்செயல் செய்யின் அல்லால்
எச்செயல் செய்யின் அரசுத்துறை திருந்தா.

**நாடோ காடோ பள்ளமோ மேடோ இவற்றில் எது நல்ல நிலம் எனின், இவற்றில் எதுவும் நல்ல நிலம் அன்று; நல்லோர் வாழிடம் எதுவாயினும், அது நல்ல நிலமாம் எனல்**

9 நாடோ காடோ அவலோ மிசையோ
நல்ல நிலந்தான் யாதென்னின்?
ஈடே இல்லா நற்குண மக்கள்
இருக்கும் இடம்நல் லிடமென்றே
பீடார் ஒளவை பேசின என்றே
பெட்பார் நன்மை பெறவேண்டின்
வாடா மக்கள் நல்லவ ராகின்
வாழும் நிலமும் நன்றாமே.

**ஒழுங்கான முறையில் பொருள் தேடினுல் ஓரளவே வாழமுடியும்; அதனை விட்டு மிகுதியாகப் பொருள் தேடினுல் ஆடம்பரமாக வாழலாம் என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு அறிவில்லாதவர் ஒழுங்கற்ற முறையில் பொருள் தேடுவர். இது உலகத்திற்கு தீங்கு பயக்கும். ஆதலால் நாட்டு நலத்தில் கருத்துடைய அறிஞர் இத்தீய செயலை மாற்றவேண்டும் எனல்**

10 ஒழுங்காக உழைத்திட்டால் ஓரளவே
வாழ்ந்திடலாம் உலகில் விஞ்ச
மழுங்காத பெருஞ்செல்வம் பெறின்மேலாய்
வாழ்வமென மனத்தின் கண்ணே
செழுங்காதல் மீக்கூரச் சிறுசெயலால்
பொருள்சேர்ப்பர் சிறியர்; நாட்டில்
அழுங்காத பேரறிஞர் அவர்செயலை
மாற்றிவிடின் அவனி நன்றாம்.

10 விஞ்ச – மிக

**நல்லவர்தம் நலனை நாடெலாம் அறியப் புகழ்வதும் தீயவர்தம் தீமையை அவர் தூற்றிப் பழிப்பதும் எதன் பொருட்டெனின்? பழித்தலால் தீயவரின் உள்ளம் மாறுபட்டுத் திருந்துமாதலின் அச்செயல் செய்யவேண்டுமென்க.**

11 நல்லவர்தம் நற்பண்பை நாடறியப்
புகழுதலும் நன்மை யில்லாப்
புல்லர்தமை அலர்தூற்றிப் புறங்கூறிப்
பழிக்குதலும் புகலில் நன்றாம்;
கல்வகைய உளத்தினரும் இடித்துரைக்கின்
உளம்மாறல் கண்டா மன்றே
பல்வகையில் தீயவரைத் திருத்தாமல்
வளர்த்துவிடின் பாழாம் வையம்.

## அரசியல் ஆக்கும் அறிஞரின் மனம்

12 உண்மையில் ஊறி உவப்பொடு விளங்கி
ஊக்கமே ஆக்கமாய் வளர
எண்மைய வான பொருளையெண் ணுமல்
என்றுமே உயர்பொருள் எண்ணி
தெண்மையில் நின்று சினம்வரின் ஆற்றித்
தீங்குசெய் காமமே இலாமல்
திண்மையில் நிற்கும் அறிஞரின் மனமே
தெளிவுடன் அரசியல் ஆக்கும்.

## அறிவிலாச் சிறியவர் மனம் அரசியலை அழிக்கும்

13 பொய்யினில் ஊறிக் கவலையில் மூழ்கிப்
புகழிலா மடிமையுள் திளைத்து
மெய்யுறும் நல்ல பொருளை மேவாமல்
மிகமிகச் சிறுபொருள் பற்றி
நய்வுறு சினமும் காமமும் வளர
நாடொறும் மிகமிக மயங்கி
மய்வர நிற்கும் சிறியவர் மனமே
மாண்புள அரசியல் அழிக்கும்.

---

12 எண்மைய - எளிய

## அரசியலிற் புகுவார்க்கு வேண்டுவன

14 அரசியலிற் புகநினைப்பின் அகந்தூய்மை
முதல்வேண்டும்; அவனி எல்லாம்
உரமுடனே வாழ்ந்திருக்க உறுதிபுரி
செயல்செய்ய உள்ளம் வேண்டும்
கரவினராய்த் தீங்குபுரி கயவரொடு
கலவாமல், காலத் தாலே
வரமுடைய நற்செயலை வழுவின்றிச்
செய்கின்ற வலிமை வேண்டும்

## நான் எனும் செருக்கின்றி நாட்டுத் தொண்டு செய்க

15 கல்வியால் பொருளால் இளமையால் அழகால்
கவின்தரும் உடைஅணிப் புனைவால்
பல்வகைத் திறஞ்சேர் உயர்குடிப் பிறப்பால்
பயன்அழி மடமையால் பிறவால்
வல்வகை வினைக்கும் செருக்குவந் திடுமே
வந்திடில் தொண்டுளம் அழியும்;
நல்வகை யான தொண்டரெல் லோரும்
நண்ணிடார் நானெனும் செருக்கை.

## நல்லோர் அரசியலை நடாத்தின் நாட்டில் நலம் பெருகும்; தீயவர் அரசியலை நடாத்தின் நன்மை சிறிதும் உண்டாகாது; நாட்டில் பெருந்துயர் பெருகும் எனல்

16 உயர்ந்த பண்புளோர் தங்களால்
அரசியல் உதிப்பின்
அயர்ந்த மக்களை உயர்த்திடும்
அருமருந் தாகும்;
துயர்ந்த தீயவர் தங்களால்
அரசியல் தோன்றின்
பெயர்ந்து போகுமே நன்மைகள்
பெருந்துயர் பெருகும்

## II அரசியலில் நல்லோர்

தம் வாழ்க்கையினையே கருதுபவர், தாமும் வாழ்ந்து பிறரும் வாழ வேண்டும் என்று கருதுபவர், தம் வாழ்வை கருதாமல் உலகம் வாழ வேண்டுமென்றே கருதுபவர் என மக்கள் மூவகையினராவார்; இம்மூவருள் தம் வாழ்வினைக் கருதாமல் உலகம் வாழ்தலையே கருதுபவர் நமக்கு வழிபடு தெய்வமாம் எனல்

17 தாம் வாழக் கருதுகிற தாரணியில்
சிற்சிலர்தாம் தாமும் வாழ்ந்து
தேம்வாழத் தொண்டுசெய்வர்; அவர்தமினும்
தெளிந்தஅறி வுடைய ரெல்லாம்
தாம்வாழக் கருதாமல் தாரணிதான்
வாழ்வதற்கே தக்க செய்வர்;
நாம்வாழத் தொண்டுசெயும் நல்லோராம்
இவர்நமக்கே நல்ல தெய்வம்

நற்பண்புடையோர் அரசியலில் இருந்தால் மிக நலிந்த ஏழையரெல்லாம் நலம் பெறுவர்.

18 அழுக்காறும் அவாவுமின்றி அனுதினமும்
நாட்டுநலம் அகத்தில் விஞ்ச,
வழுக்காத முயற்சியுடன் பேரறிவும்
நற்பண்பும் வளர்ந்து நிற்ப,
இழுக்காமல் பணிபுரியும் இயல்புடையோர்
அரசியலில் இருப்பா ராயின்
கொழுக்காத எளியவரும் கொழுத்துநலம்
பெறவாழ்வர் குறைகள் நீங்க

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றிருப்பர் பேரறிஞர்

19 என்னுடைய தாயகமாம் இந்நாடு
நன்றாய் இலங்கி வாழ
நன்மைதருஞ் செயலெல்லாம் நானியற்றி
வாழ்விப்பேன்; நாட்டு வாழ்வே

என்னுடைய வாழ்வாகும்; என்குடும்பம்
என்கேளிர் எனவொன் றில்லை;
மன்னுடைய நாட்டிலுள்ள மக்களெலாம்
கேளிரென்றே மதிப்பர் நல்லோர்.

**உண்மை முதலான நற்பண்புகளுடன் கூடி, பிறர்க்கு கொடுத்தலன்றி அவரிடம் வாங்குதல் அறியாத பேரறிஞர் நாட்டினை ஆளவரின், நாடு நன்றும்.**

20 உண்மையே உளத்தில் ஊன்ற
உலகினை வாழச் செய்யும்
திண்மைசேர் முயற்சி யோடு
தெரிந்துசெய் வினையும் நிற்ப
வண்மையே செய்த லன்றி
வாங்கிடக் கருதி டாத
ஒண்மைசேர் அறிஞர் ஆள
உற்றிடின் உலகம் நன்றும்.

**இயற்கையான நுண்ணறிவு, கல்வியறிவு என்னும் இவற்றுடன் அயர்ந்திருத்தல், அச்சம், பேராசை, அகந்தை, அநீதி, மயக்கம் என்பவை இல்லாதவன் அமைச்சனய் வருக.**

21 இயற்கை யாகவே நுண்ணறி வுடைமையும் இயன்ற
செயற்கை யாகிய கல்வியும் சேர்ந்துநன் கிருப்ப,
அயர்ச்சி அஞ்சுதல் ஆசைகள் அகந்தைகள் அநீதி
மயற்கை நீங்கிய மாண்பினன் மந்திரி யாக.

**நல்லன பலவற்றில் வல்லவர் அரசியலில் வாழ்ந்திருந்தால் வையமும் பலவளத்துடன் வாழ்ந்திருக்கும்.**

22 கல்வியினல் நுண்ணுணர்வால் பொதுநலத்தால் சிறந்து
காசினியின் வாழ்வினையே கருத்தகத்தில் வைப்பார்
சொல்லதனல் பிறரையெலாம் நாட்டுநலப் பணிக்கே
சுறுசுறுப்பாய் இயக்கிவிடும் சொற்றிறத்தில் வல்லார்
நல்லபல செயல்களையே நாடோறும் இயற்றி
நாட்டவரை வாழ்விக்கும் செயற்றிறத்தில் நல்லார்
வல்லயிவர் அரசியிலில் வாழ்ந்திருப்பின் என்றும்
வையமெல்லாம் வாழ்ந்திருக்கும் வளங்கள்பல பெற்றே

**பற்றற்ற உளத்தில் பொதுநலப்பண்பினை ஊன்ற, இன்சொல் வாய்மையுடன் விளங்க உலகம் வாழத்தொண்டு புரிவோர் இவ்வுலகில் சிலரே உள்ளனர். அவரையும் தன்னலத்தோர் அரசியலில் விடுவதில்லை.**

23 பற்றற்ற நல்லுளத்தில் பார்வாழக் கருதும்
பண்பதனை ஊன்றிவிட, அதிலிருந்து கிளைத்த
வெற்றற்ற இன்சொல்தான் வாய்மையொடு விளங்க
வியனுலகம் வாழ்வதற்கே வேண்டுவன புரியும்
செற்றற்ற பெரியோர்தாம் சிலரேனும் இருப்பச்
சிறுமையின்றி இவ்வுலகம் சிறப்படையும்; ஆனால்,
நற்றற்ற தன்னலத்தோர் இவர்தம்மை என்றும்
நன்மைபுரி அரசியலில் நண்ணவிடார் தடுத்தே.

**நாட்டிற்குப் பல நலம் புரியும் திறன் மிக்கவர் அரசியலுக்குவரின், குறைவில்லை**

24 நாட்டிலே நண்ணும் தீமையை அகற்றி
நலம்பல நாடொறும் விளைத்து
வீட்டிலே வாழ்வும் காட்டிலே விளைவும்
விழைந்திடும் மனத்திலே அறமும்
ஏட்டிலே நல்ல இலக்கியப் படைப்பும்
இயற்றிடும் தொழிலிலே பொருளும்
கூட்டிட விரும்பி முயலுவோர் அரசில்
கூடிடில் குறைவில்லை நமக்கே.

**வினை செயும் முறையறிந்த திட்பமுடையார் அரசியலில் இருப்பின் அரசியல் சிறக்கும்**

25 ஊர்தொறும் இயங்கி மக்கள்தம் குறையை
உண்மையாய்த் திரிபற உணர்ந்து
சீர்பெற அதற்கு வேரிது வென்னச்
சிதைவிலா துணர்ந்தபின், போக்கும்
ஏர்பெறும் செய்தி இதுவெனக் கருதி
இராப்பகல் முயன்றுசெய் வினையால்
தீர்வுறப் போக்கும் திண்ணியர்க் கிடமாய்த்
திகழ்வுறின் அரசியல் சிறக்கும்.

தூய மனத்தை உடையராய், பிறரிடம் துன்பம் தோன்றின் இரக்க முற்று அதனைப் போக்கி நலம்புரியும் பேருழைப்பினைப் பெற்றவர் அரசியலிலிருப்பின் உலகம் நலம் பெறும்.

26 தூய மனமும் பிறர்தமக்குத்
துன்பம் தோன்றின் இரங்குதலும்
ஆய அவர்க்கு நலஞ்செயலும்
அளவில் லாத பேருழைப்பும்
தீய செயலை போக்குகின்ற
திறனும் வாய்ந்தோர் அரசியலில்
மேய பொழுது மேதினிக்கு
மேன்மை யாவும் மேவிடுமே

நாட்டுப்பற்று, மொழிப்பற்று என்னும் இருவகைப் பற்றுக்களை உடைய வனாய் நாட்டின் பொருள் நிலையை அறிந்து, தொழில் வளம் பெருக்குபவன் குடிமன்னனாம்.

27 நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும்
நண்ணி முதலாய் மனத்திருப்ப
தேட்டின் நிலையை நாட்டுள்ளே
திரிந்து நன்றாய்த் தெரிந்துணர்ந்து
வாட்டம் நீங்கப் பலதொழிலை
வகுத்துக் கொண்டே நன்கியற்றி
ஈட்டும் பொருளை உலகுபெற
இயற்று கிற்போன் குடிமன்னன்.

தன்னல விருப்ப மின்றி பொதுநல விருப்பமே நல்லோர் விருப்பம்

28 தனக்கென வாழ்தல் வேண்டார்
தரணிவாழ் மக்கள் வாழ்வே
எனக்குறு வாழ்வாம் நாளும்
இவரெலாம் முயற்சி விஞ்ச
கனக்குறு தொழிலைச் செய்து
கரையறு பொருளை ஆக்கி
மனக்குற வாழின், அஃதே
மனவிருப் பென்பர் நல்லோர்.

---

28 விஞ்ச – மிக

**முடியாட்சியில் முடிமன்னர் தம்குடிகளைத் தமக்கு அடியவராகக் கருதுவர். குடியாட்சியில் குடிகளே மன்னர். நாமெல்லாம் அவர்க்குத் தொண்டர் என்று கருதி பணிபுரிவர் அரசியலிற் புகுந்த நல்லறிஞர்**

29 முடியணி மன்னர் முறைமைகுன் றுமல்
முன்னியே அரசுசெய் திடினும்,
அடிமைய ரென்றே குடிகளை நினைப்பர்;
அதுதனை நீக்கிஇன் றியங்கும்
குடியர சியலில் குடிகளே மன்னர்;
குடியர சியலில் நின்றிடுநாம்
படியுள மக்கள் தொண்டரே என்று
பணிசெய்வர் பார்மிசை அறிஞர்.

**வினையைத் தெரிந்து தூய்மையாகத் திட்பமாகச் செய்யும் ஆற்றல் படைத்தவரைத் தேர்ந்தெடுத்து அரசியலிற் புகுத்தின் நாட்டின் பொருள்துறை ஓங்கும்**

30 வினைதெரிந்து தூய்மையுடன் திட்ப மாக
வினைமுடிக்கும் ஆற்றலிலே விளக்கம் பெற்றோர்
அனையெனவே அரசியலில் அமைந்து நிற்பின்
அந்நாட்டுப் பொருள்வளந்தான் ஆக்க மெய்தும்;
தினையளவும் வறுமையிலை ஆத லாலே
தேர்வதனில் அத்தகையோர் தம்மைத் தேடி
நினைவுடனே தேர்ந்தெடுத்து வைத்தா லன்றி
நீணிலத்து வறுமையெலாம் நீங்கிடாதே.

## III அரசியலில் தீயவர்

31 உள்ளமெலாம் தன்னலமும் பொருட்பற்றும் உறைய
உலகினுக்கு நலம்புரிவேன் ஒட்டினைத்தா என்னும்
கள்ளமனக் கயவருக்கே ஒட்டதனை நல்கு
கருத்தில்லா உள்ளத்தீர்! பின்விளைவைக் கேளீர்
மெள்ளயிவர் அரசியலில் மேவிவிடின் என்றும்
மேதினிக்கு நலமில்லை; நலமில்லா விடினும்
வெள்ளமெனத் தீமைசெய்வர்; இத்தீமை யாலே
வேற்றுமையும் பூசல்களும் வறுமையொடு வருமே.

**நச்சரவம் அனையவர் அரசியலிற் புகுதின் நாடு நலனிழந்து தீமையை அடையும்; அவரையே உலகம் மதித்தால், அது எப்பொழுதும் நன்மையை அடையாது.**

32 எச்செயலைப் பழித்திடுவோம் எவர்தம்மை இகழ்வோம்
எவ்வெவர்க்குத் தீங்குசெய்வோம் எனும்நினைவே உடைய
நச்சரவம் அனையவரே அரசியலிற் புகுதின்
நாடுநலம் இழுப்பதொன்றோ? தீமையெலாம் அடையும்;
பொய்ச்செயலால் மெய்த்தொண்டர் போலவே நடித்துப்
பொருமைநிறை உளத்தாலே பிறர்தம்மைக் கருதும்
அச்சிறுவர் தங்களையே உலகம் மதித் திட்டால்
அவ்வுலகம் நன்மையினை அடைவதென்றும் இலையே.

**பொருள் பேய் பிடித்த மருட்பேய் அணையார் அரசியலில் மண்டிக் கிடந்தால் அவ்வரசியலில் அருளுக்கும் அறத்திற்கும் இடமின்றி அறியாமைக்கே இடமாம்**

33 பொருட்பேய் உளத்தைப் பிடித்தாட்டப்
புறத்தோர் பொருளைப் பலிவாங்கும்
மருட்பே யெல்லாம் அரசியலில்
மண்டிக் கிடந்தால் விளைவென்னே?
அருட்கே இடந்தான் சிறிதின்றி
அறஞ்சால் முறைமை அழிந்தேக
இருட்கே இடமாய் இவ்வுலகம்
என்றும் நன்மை அறியாதே.

**நாட்டுமக்கள் பசியினுல் நலிந்திருக்க அதனைக் கருதாமல் அரசியலில் பதவி உற்றவர் கட்சிவிட்டுக் கட்சிமாறித் திரிவர்**

34 நாட்டிலே மக்கள்பலர் வறுமையினுல்
நலிகின்றார்; நாட லின்றி
ஓட்டிலே பதவிவர அரசியலில்
உற்றிருப்போர் உன்னல் செய்யார்
ஒட்டிலே அடங்காத தன்னலமே
உருவாகி இங்கும் அங்கும்
கோட்டிலே பாய்ந்தோடும் குரங்குபோல்
நிலைமாறிக் குதிக்கின் றாரே

## தாழ்ந்த தீயோர் நற்ருெண்டு செய்யார்.

35 சிங்கத்தின் பெருமிதந்தான் சிறுநரிக்குப்
பிடிப்பதிலே, சிறப்பில் லாமல்
பங்கஞ்செய் வஞ்சனையும், அழுக்காறும்,
சிறுசெயலும் பரித்து நின்றே,
எங்கெங்கும் மிகவோடி ஏமாற்றிப்
பொருள்பறிக்க எண்ணின் அல்லால்,
தங்கும்நற் ருெண்டதனைத் தலைப்பட்டுச்
செயலாற்ருர் தாழ்ந்த தீயர்.

## தீயவர் கட்சிவிட்டுக் கட்சிமாறிக் காசு சேர்ப்பர்.

36 முரசியலக் குழுவகுத்து முயலுகின்ற
அக்குழுவின் முன்பி ஞலே
பரசியலத் தேர்வில்நின்று பலர்வோட்டால்
வெற்றி பெற்ற பண்பில்லோர்தாம்
உரசியலும் அக்குழுவில் ஒன்றிநின்று
நாட்டுநலம் ஒன்றும் செய்யார்;
கரசியலக் கட்சிவிட்டுக் கட்சியிற்போய்க்
கலாம்விளைத்துக் காசு சேர்ப்பார்.

## தன்குற்றம் உணராமல் பிறர்குற்றமே கூறும் தன்னலக்காரர் மொழியால் நாட்டில் வீண் குழப்பமே விளையும்.

37 அதுகுற்றம் இதுகுற்றம் அவர்தீயர்
இவர்தீயர் அறிக என்றே
மதுவினைப்போல் மயக்கஞ்செய் மாண்பில்லா
மொழிகூறி, மக்கள் வாழப்
பொதுநலஞ்செய் அரசியலிற் புக்குநின்று
தன்னலமே புரியும் தீயர்
விதுவிதுப்புச் சொல்லாலே வீண்குழப்பம்
விளைந்திடுமே வீணும் நன்மை

---

36 கலாம்—கலகம்

**சொல்வேறு செயல்வேருன தீயவர் அரசியலுள் வாராமல் தடுக்கின்ற வலிமை நாட்டிற்கு வேண்டும்.**

38 சொல்லாலே நாட்டுநலம் செய்வதற்குத்
துடிப்பார்போல் சொல்லே சொல்லி
எல்லோர்தம் பொருள்களையும் ஏமாற்றிப்
பறிப்பதற்கே எண்ணும் சூழ்ச்சி
வல்லோர்கள் அரசியலில் வாராமல்
தடுக்கின்ற வலிமை நாட்டில்
இல்லாமற் போனக்கால், இவ்வுலகம்
உயர்வதுதான் என்றும் இன்றே.

**தக்கவரைத் தடுத்து நிறுத்திவிட்டுத் தகாதவர் அரசியலில் புக முயலுவர்; அம்முயற்சியைத் தடுக்க உலகமக்களுக்கு உணர்வு வருமாயின் அக்கனமே அரசு ஆக்கமுற எழும்**

39 மக்களினம் வெறுத்தாலும் மதிக்காமல்
பேராசை மண்டித் தள்ள
தக்கவரைத் தடைப்படுத்தித் தாம்புகுந்து
நிலைப்பதற்கே தக்க சூழ்ச்சி
மிக்கவரை அகற்றுதற்கு மேதினியோர்க்
காற்றல்மிக மேவு மாகில்,
அக்கணமே அரசியல்தான் ஆக்கமுற
எழுங்காலம்; அதுவா ராதோ?

**உடலுழைக்க விரும்பாமல் உலகை ஏமாற்றிப் பிழைக்கும் இயல்புள்ளவர் அரசியலிலும் புகுவாராயின் அரசுப் பொருள் நாட்டுப் பணிக்குச் செல்லாமற் கெடும்**

40 உடலுழைத்துத் தொழில்செய்ய ஒருக்காலும்
விரும்பாமல் உலகை ஏய்த்துத்
திடமிகுக்கப் பொருள்பறிக்கும் திருத்தொண்டே
தினம்புரியும் திருட ரெல்லாம்
அடல்மிகுந்த அரசியலில் புகுந்துவிடின்
அரசுநலப் பொருள்க ளெல்லாம்
கெடல்மிகுந்து நாட்டுநலப் பணிக்கெல்லாம்
கிட்டாதே; கேட்போர் யாவர்?

**அரசியலுக்குள்ளிருந்து கலகம் விளைவிப்பவரை பொதுமக்கள் விலக்கி விட வேண்டும்.**

41 உலகநலம் புரிகின்ற அரசியலில்
அமைதியுடன் ஒன்றி நில்லார்,
கலகமிட்டுக் காலத்தை வீணுகக்
கழிப்பதையே கருத்திற் கொண்டார்,
அலகில்பெருந் தீங்குவர அரசியல்தான்
அழிவதற்கே ஆக்கம் செய்வார்,
விலகிவிடப் பொதுமக்கள் விரும்பாம
லிருந்துவிடில், வீணும் நாடே.

**அரசியலில் சிறியரினம் புகுந்து சிறந்து வாழின் உலகநலம் ஒழியும்**

42 பொய்யதனை மெய்யாக்கிப், புனிதமிகு
நல்லோரைப் புறமே கூறி,
கையதனிற் பொருள்கிடைப்பக் கடுங்கொடிய
செயலெல்லாம் கணக்கில் லாமல்
செய்வதற்கு நாணுத சிறியரினம்
அரசியலிற் சிறந்து வாழின்
உய்வதற்கு வழியின்றி உலகநலம்
ஒழிந்திடுமே; உணர்வோர் யாவர்?

**அரசியலுக்குள்ளிருந்தே அரசியற் சட்டத்தைக் கடப்பவரை உலக மக்கள் அரசியலிலிருந்தே கடத்தல் வேண்டும்.**

43 அரசியற் சட்டம் உலகநன் மையினை
அகத்தினிற் கருதிய தென்றுல்
பரசிடும் அரசில் உற்றவர் அதனைப்
பாதுகாத் திடக்கரு தாமல்
உரசியல் தனது சொந்தநன் மைகளை
உளத்தினிற் கருதியே கடந்தால்
கரசியல் அந்தக் கயவரைக் கடத்தல்
காசினி மக்களின் கடனே.

---

43 பரசிடும்—போற்றிடும், உரசியல்—வலிமை உள்ள

**தீயவர் அரசியலிலிருப்பின் தன்னலமே பெருகும் பொதுநலம்; அழியும்; ஆதலால், இப்பரிசு வளர நாட்டவர் இடந்தரலாகாது.**

44 எப்பொய்யை எவரிடத்தே எப்புனைவால் இயம்பி
ஏமாற்றி வாழலாம் எனக்கருதி என்றும்
தப்புசெயும் தீயரெலாம் அரசியலிற் புகுந்து
தழைத்திருக்கத் தன்னலமே தாரணியிற் பெருகும்;
ஒப்புடைய பிறர்நலமாம் பொதுநலங்க ளெல்லாம்
உலகத்தில் நடவாமல் உண்மையொடு மாயும்;
இப்பரிசு நம்நாட்டில் வளர்வதற்கு நாமும்
இடங்கொடுப்பின் அரசியலால் எப்பயனும் இலையே.

**தன்னலம் கருதுபவர் அரசியலில் இரங்குவது தீது; அரசியலில் பொது நலம்புரிபவரே இருப்பது நன்று**

45 எங்களினம் எம்சாதி எம்உறவு
எம்குடும்பம் என்றே எண்ணும்
தங்கள்நலக் காரரெலாம் தக்கபொது
அரசியலில் தங்கல் தீதாம்;
திங்களென ஞாயிறெனத் தென்றலென
மாரியெனத் திகழும் தேயம்
எங்கணுமே நலம்பெருக ஏற்றசெயல்
செய்பவரே இருப்பின் நன்றே.

**காமமாகிய குணம் மிக்கவர் அரசியலிலிருப்பின் சுடுகாட்டைப்போல் நாடு அழிவுற்றிருக்கும்**

46 காமமென் கின்ற தீக்குணம் பெருகிக்
கடலென நிறைந்துநின் றிடலால்
ஏமம தின்றிப் பிறர்நிலம் பொருள்கள்
எழில்நிறை மகளிர்மேல் ஒடும்
பேமுறு மனத்துப் பேதைய ரெல்லாம்
பெருகிவந் தரசிய லிருப்பின்
ஈமம தென்ன நாடழி வுறுமே;
எண்ணிநீர் இவர்களை அகற்றீர்.

**குற்றமே புரியும் தீக்குணம் உடையவரை அரசியலிலிருந்து விலக்க உலக மக்கள் அஞ்சுவர்.**

47 குற்றமே புரியும் குணமுடை யவர்கள்
குறுகியே அரசியல் புகுந்தால்
எற்றென இரங்க, எளியரை நசுக்கி
இருங்கொலை களவையே புரிவர்;
மற்றவர் நலனை மனத்தினில் மதிக்கார்,
மன்முறை முற்றிலும் அழிப்பர்;
பற்றுறும் விலங்கு போன்ற பாவியரைப்
பாரவர் அகற்றஅஞ் சுவரே;

**வாழ வழி தெரியாத வறியவர் மிகுந்துள்ள இந்நாட்டில் நல்ல அரசினைக் காலந்தாழ்த்தாமல் நடத்த வேண்டியிருப்பச் சிலர் அரசியலிலிருந்து ஊழல் செய்து பொருள் திருடுவர்.**

48 வாழத் தெரியா வறியவரே
வளர்ந்து கிடக்கும் இந்நாட்டில்
தாழற் குரிய செயலின்றித்
தகுமா றரசை நடத்தாமல்
சூழற் குரிய தன்னலப்பேய்
சொல்லும் உளத்தைப் பிடித்தாட்ட
ஊழல் புரிந்து பொருள்திருட
உளத்திற் சிறிதும் அஞ்சாரே.

**பல தீமைகளைப் புரிவோர் அரசியலிலிருப்பின், தன்னலமும் வறுமையும் ஒழுக்கக்கேடும் உண்டாகும்.**

49 பொய்யதனோ டுறவாடிப் பொருமை விஞ்சப்
புறங்கூற்றில் வல்லுநராய்ச் செருக்கில் ஓங்கி
மெய்யதனை மிகக்கெடுத்துக் கள்ளும் உண்டு
மிகுகாம வேட்கையராய்த் திரிவோ ரெல்லாம்
வையகத்து நலம்புரியும் அரசில் வைகின்
வருவனதாம் எவையென்னில்? வறுமை யோடே
நய்வுதரும் தன்னலமும் ஒழுக்கக் கேடும்
நாடெல்லாம் வளர்ந்திடுமே! நாடு வார்யார்?

**தீமை பல செய்வோர் நாட்டுள் போகிப் பிறர் பொருளைப்பறிக்க வலை போட்டுக் கொண்டிருப்பர்; அத்தகையோர் அரசியலில் வந்து அமர்ந்து விடின் நம் பொருளை அவர்க்கே கொடுத்துவிட வேண்டியதுதான்.**

50 கள்குடிப்பர் பொய்மொழிவர் களவும் செய்வார்
கடுங்கொலைகள் செய்வதற்குச் சிறிதும் அஞ்சார்
புள்பிடிக்கும் வேடரைப்போல் நாட்டுள் போகிப்
பொருள்பிடிக்கும் தொழில்தனையே புகன்று செய்வார்
நள்பிடிக்கும் அரசியலில் நண்ணி நின்றால்
நாட்டுமக்கள் தம்முடைய பொருளை யெல்லாம்
எள்பிடித்து நீருற்றி ஈந்தா லன்றி
இவரியற்றுங் கொடுமைகட்குத் தப்ப லாமோ?

**அறம் பாவம் அறியாத தீயவர் அரசியலிலிருப்பின் உலக மக்களுக்கு வாழ்வும் மதிப்பும் இல்லை.**

51 பொருள்விரும்பிப் பெருஞ்சினத்தில் பொருந்தி நின்று
புந்தியினில் அறம்பாவம் அறியா ராகி
அருள்விருப்பம் சிறிதேனும் அடைகில் லாராய்
அகமெல்லாம் தீயவற்றை அடைத்து வைத்து
மருள்விரும்பும் சிறியரினம் அரசில் மன்னில்
மக்களுக்கு வாழ்வுண்டோ? மதிப்பும் உண்டோ?
இருள்விரும்பும் இவராலே இடுக்கண் உண்டே;
ஏழமையும் தீச்செயலும் எங்கும் உண்டே.

**சிலர் சீர்திருத்த மேலோனைப் போலப்பேசி பொருள் பறிக்க நடிப்பர்**

52 தேட்டினையே பெறவேண்டின் வஞ்சம் இன்றித்
திறமாக உழைத்திட்டால் தேட லாகும்
மேட்டிமைசால் சீர்திருத்த மேலோன் என்றே
மேதினியோர் மிகநினைக்க நடிக்கும் தம்பீ!
ஏட்டினுக்கே அடங்காத மொழியைப் பேசி
எவ்வெவரும் தன்போல இலையென் றேசி
நாட்டினுக்கே நலஞ்செய்யத் துடிக்கின்றாயா?
நலம்பேசிப் பொருள்பறிக்க நடிக்கின்றாயா?

---

50 புள்- பறவை

**உலகம் நல்லவரை மதிப்பதில்லை; தீயவரையே மதிக்கின்றது.**

53 நல்லவராய் இருப்பதொரு தகுதி யாலே
நாட்டுமக்கள் மதிப்பதில்லை; நாளும் நாளும்
தில்லுமுல்லு செயல்வேண்டும்; செருக்கே விஞ்சத்
தினந்தோறும் தீமைகளே செய்தல் வேண்டும்;
வல்லவனென் பதைஅடியால் உதையால் குத்தால்
வையகத்து மக்களுக்குக் காட்டல் வேண்டும்;
எவ்வெவரும் தமைக்கண்டால் அஞ்சவேண்டும்
என்பவரை, உலகமக்கள் மதிக்கில் என்னும்?

**உள்ளத்தில் தீங்குகளையன்றி ஒரு நன்மையும் இல்லாத தீயவர் பள்ளம் புகும் புனல் போல் அரசியலுக்கு வரின் பயனில்லை.**

54 உள்ளத்தைத் திறந்துவிடின் தன்னலமும்
பொருட்பற்றும் ஒழுக்கக் கேடும்
கள்ளத்தைப் புரிவதற்குக் கருவாகும்
தீயுணர்வும் காண்ப தல்லால்,
கொள்ளத்தின் பிளவேனும் நன்மையிலாக்
கொடியரினம் குதித்துக் கொண்டு
பள்ளத்திற் புகும்புனல்போல் அரசியலிற்
புகுந்துவிடின் பயன்தான் என்னே?

**அறிவில்லாதவர் பொருளாலும் செல்வாக்காலும் அரசியலில் நுழைந்தால் நலமில்லை.**

55 அரசியலைச் சிறிதேனும் அறிதலிலார்
அறிவதற்காம் ஆற்ற லில்லார்;
உரசியலும் அரசியலில் உறுபொருளால்,
செல்வாக்கால், உற்று நிற்பின்,
திரமுடைய செயல்செய்ய அறியாரே;
அறிவில்லார் தீங்கே செய்வர்;
வரமுடைய நல்லறிஞர் அரசியலில்
வந்திருப்பின் வையம் உய்யும்.

## பொய்மையை ஆள்பவர் அரசியலிற் புகின் அரச நீதி கெடும்.

56 உண்மையை ஒழிக்கப் பொய்ம்மையை வளர்க்க
ஊக்கமாய் உழைப்பவர் தம்மை
ஒண்மையை உடைய அரசியல் அரங்கில்
உறுப்பினர் முதல்வராய்ச் செய்யின்
கண்மையை உடைய அரசியற் சட்டம்
கண்ணிழந் தலமரும் அந்தோ!
வெண்மையை உடைய அறிவினர்க் கிதுதான்
விளங்குமோ? நுண்மையர் உணர்வார்.

## இனப்பற்றால் பொருளுடையவர் என்பதனால் அவர்க்கு ஓட்டளிப்பின் அது மிகக் கொடுமையாம்.

57 கள்ளினைக் குடிப்பர் கயமையில் நடிப்பர்
கல்வியை முற்றிலும் வெறுப்பர்
ஒள்ளிய உணர்வு சிறிதுமே இல்லார்
உற்றஇத் தகுதியர் தமக்கே
கொள்ளுறும் இனத்தால் பொருளினால் வோட்டைக்
கொடுத்திடில், கொடியதிற் கொடிதே
எள்ளுறும் இவரால் அரசியல் குழம்பி
ஏகுமே தீயதோர் நெறியில்.

## குடியாட்சியிலுள்ள அரசியற் பணியாளர் முடியாட்சியிலுள்ள அரசியற் பணியாளரைப் போல் குடிமக்களிடம் முறைப்பாக நடக்கக் கூடாது.

58 குடியாட்சி முடியாட்சி எனுமிரண்டுள்
குடியாட்சி முறையைப் பற்றிப்
படியாட்சி செயப்புகுந்த பணியாளர்
மக்களுக்கே பணியா ராகி
முடியாட்சி அலுவலர்போல் முறைப்பாக
நடந்துகொளல் முறையா காதே;
மடியாட்சி ஆகிடுமே மக்கள்கருத்
துணராத மன்னர் வாழ்வே.

**சில நல்லோரேனும் இருத்தலினுல் இவ்வுலகம் சிறப்படையுமெனினும் தன்னலமுடையோர் அவரை அரசியலுள் நுழையவிடார்.**

59 பற்றற்ற நல்லுளத்தில் பலர்வாழக் கருதும்
பண்பதனை நன்கூன்ற, அதிலிருத்து கிளைத்த
வெற்றற்ற இன்சொல்தான் வாய்மையுடன் விளங்க
வியனுலகம் வாழ்வதற்கே வேண்டுவன புரியும்
செற்றற்ற பெரியோர்தாம் சிலரேனும் இருப்பச்
சீர்த்தியுடன் இவ்வுலகம் சிறப்படையு மெனினும்
நற்றற்ற தன்னலத்தோர் இவர்தம்மை என்றும்
நானிலத்து வேத்தியலில் நணுகவிடார் வெகுண்டே.

**பின் விளைவைக் கருதாத மூடர் அரசியலிற் புகுந்தாற் பயனில்லை.**

60 அளவில் அடங்காப் பொருட்பற்றும்
அதிக மான தன்நலமும்
உளையும் பிறரைக் கண்டக்கால்
உருகிடாத கல்மனமும்
களவில் சினத்தில் கடுஞ்சொல்லில்
காம வெறியில் கன்றிநின்றே
விளைவை அறியா மூடரெல்லாம்
விரும்பி அரசில் புகிலென்னும்?

**எலியைப் போன்றவரையும் நரியைப் போன்றவரையும் பொதுப்பணித் துறையில் வைத்தால், அங்குள்ள பொருளெல்லாம் தன் பணிக்கே. செலவிடுவர்.**

61 கலியுகத்தை முதல்யுகம்போல் ஆக்கு கின்ற
காட்சிநிறை சான்ருேர்தாம் காத்து நிற்ப
எலியினைப்போல் நரியினைப்போல் வஞ்சம் பெற்றே
ஏமாற்றிப் பொருள்திருடும் எண்ணம் உள்ள
வலியினரைப் பொதுப்பணியில் வைத்து விட்டால்
வையகத்தில் அப்பணிதான் வாழ்வ துண்டோ?
பலியிடுவர் தன்பணிக்குப் பொருளை யெல்லாம்
பாரிலுளார் பொதுப்பணிக்குப் பொருள்கிட் டாதே.

---

59 வெற்றற்ற- வெறுமை இல்லாத, வேத்தியலில் - அரசியலில்
59 வியனுலகம்- பெரிய உலகம்

---

## பொது நலத்தில் ஆர்வமில்லாதவரை அத்துறையுனுள் வைத்தால் அது நன்கு நடவாது.

62 பொதுநலந் தன்னில் ஆர்வமே யில்லார்
பொதுநலத் துறையினுள் புகுந்தே
அதுதரும் நலனை தமக்கென ஆக்கும்
அநீதியைத் தடுத்திடா திருப்பின்;
புதுநல மிழந்து வறுமையுள் உலகம்
புகுந்திடும்; பொதுநலப் பணியில்
விதுவிதுப் புற்ற மக்களே! விழிமின்;
வீணரை விலக்கிட எழுமின்,

## கைக்கூலி (இலஞ்சம்) பெறுபவரால் அரசியல் அழியும்.

63 கைப்பொருள் பெற்று, மெய்ப்பொரு ளதனைக்
கடுகியே நடந்ததை மாற்றிப்,
பொய்ப்பொரு ளாக்கும் தீயவர் அரசில்
புகுந்திடா திருப்பது நன்றே;
''மெய்ப்பொரு ளதனை மனத்திலே கொள்ளும்
மேன்மைசால் பத்தரைப் போலக்''
கைப்பொருள் பெறவே கருதிடு கின்ற
கயவரால் அரசியல் கலங்கும்.

## பொருட் பேராசை பிடித்தவரை அரசியலில் வைப்பின் ஒரு நாளும் நாடு நலம் பெருது.

64 மதுவினைப்போல் பிறர்பொருட்கு மனமெல்லாம்
காதல்கொளும் மாண்பில் லோரைப்
பொதுநலஞ்செய் அரசியலிற் புகவைத்து
நாடுநலம் பொருந்த வேண்டில்;
அதுமுடிதல் ஒருநாளும் இல்லாகும்;
அவர்வாழ்ந்து கொழுத்தல் ஆகும்;
இதுசெய்வார் இவரென்றே எண்ணுமல்
செயல்வைப்பின் இழிவே தோன்றும்.

---

62 விது விதுப்புற்ற- விரைவுற்ற

**கைக்கூலி (இலஞ்சம்) வாங்கும் கயவரை அரசியலில் முதன்மைப் பதவியில் வைத்தால் அரசியலை நொய்மை ஆக்கிவிடுவர்.**

65 கைக்கூலிக் காதலராய் வஞ்சகராய்
மடிமைமிகும் கயவர் தம்மை
மெய்க்கோலும் அரசியலில் மேல்வைத்தால்
மேவுவது மேன்மை யன்றே;
பொய்க்கோலிப் பொதுநலத்தை வீணாக்கிப்
பொருள்திருடிப் புனித மின்றி
நொய்க்கோல வழிசெய்வர் நோன்மைமிகு
பேரரசை; நொய்ம்மை மிக்கார்.

**பொதுத்தொண்டு செய்வற்குரிய செல்வம் அறிவு வலிமையெல்லாம் இருக்கவும் சிலர் அது செய்யார்; தன்னலத்தால் அரசுப் பொருளை உறிஞ்சுவர்.**

66 செல்வ மிருக்க அறிவிருக்கச்
சிறந்த வலிமை நன்கிருக்க
நல்ல செயற்காம் இவற்றாலே
நாட்டு நலத்தைப் புரிகில்லார்;
அல்லல் புரியும் தன்னலந்தான்
அகத்தில் மிகவும் இருத்தலினால்
ஒல்லும் அரசின் பொருளையெலாம்
உறிஞ்சிக் கொழுத்துத் தாம்வாழ்வார்.

**மகனை முறை செய்த மனுநீதிச் சோழன் வாழ்ந்த இந்நாட்டிலே சில அரசியலற் றலைவர்கள் தம் உறவினர் அரசியலுள் புகுந்து பொருள் திருட உதவுவர்.**

67 அரசியலில் மகன்றனும் முறைமை தப்ப
அவன்றனையும் தண்டிக்கும் மாண்பில் நின்ற
பரசியலும் தமிழ்மன்னன் வாழ்ந்த நாட்டில்,
பலர்நலத்தைப் புரக்கின்ற பான்மை வாய்ந்த
உரசியலும் அரசியலில் உள்ளே தங்கி,
உறவினர்தாம் பொருள்திருட உதவு கின்ற
கரவியலும் கயவர்களும், அரசில் நின்றால்,
கயமைகட்குப் புகலிடமாம் அரசு தானே.

---

66 ஒல்லும்-இருக்கின்ற

சிலர் பேச்சில் வீரராயிருப்பர். அவரை இந்த உலகம் பேசியவாறு செயல் வீரராக உள்ளாரா என்பதை ஆய்ந்து அல்லராயின் அவரை அரசியலிலிருந்து அகற்றுதல் நன்று.

68 கால மாரி போற்பேசிக்
கருத்தில் அறமே கருதாத
கோல மாக்கள் தம்மாலே
கோடித் தீமை வளர்ந்திடுமே;
ஏல இவரைச் செயலாலே
இந்த உலகம் அறிந்தகற்றில்
சால நன்மை அரசியற்காம்;
சற்றும் தாழ்வு செய்யாதீர்.

அற்றாரைத் தேறுதல் ஓம்புக, என்பர் திருவள்ளுவர்; பொருள் முதலிய பல இல்லாமையுடைவரைத் தேர்ந்து அரசியலில் வைத்தால், அவர் வீண் செயல் புரிவர்.

69 பொருளிலார் புகழ்மை இல்லார்
பொருந்தும்நற் றிரண்டும் இல்லார்
அருளிலார் நல்ல வான
அரசியல் அறிவும் இல்லார்
தெருளிலார் இவரைத் தேர்ந்து
திகழும்நல் லரசில் வைத்தால்
வெருளிலார் நினைத்த வாறே
வீண்செயல் விரைந்து செய்வர்.

---

67 பரசு- வணங்கத்தக்க கரவு- வஞ்சகம்
68 காலமாரி- பருவமழை
69 வெருளிலார்- அச்சமின்மை

**பெரிய உள்ளமுடையவர் நாட்டு மக்கள் எல்லோரையும் உறவின ரென்றே நினைப்பர்; சிறிய உள்ளமுடையவர் அவ்வாறு கருதார்.**

70 மிகப்பெரிய உளத்தாலே நாட்டுமக்கள்
அனைவரையும் மிகவே நச்சித்
தகப்பெரிய உறவென்றே தாங்கொண்டு
நன்மைசெயத் தவறார் தக்கோர்;
அகம்சிறிய மக்களெலாம் அவர்கேளிர்
இவர்பகைவர் ஆவா ரென்றே
உகப்பொழியப் பாற்படுத்தி உறவினர்க்கே
உதவிபுரி ஊழல் செய்வார்.

**உயர்ந்தவர்கள் அரசியலிலிருப்பின் நரிபோன்றவர்க்கு அங்கு செல்வாக்கு இல்லாம லிருப்பிலும் அவர் தம் சூழ்ச்சியாற் குழம்பி விடுவார்.**

71 எங்கெங்கே குடிமக்கள் எக்குறையால்
வாடுகின்றார் என்றே நோக்கி
அங்கங்கே மிகவோடி அக்குறையின்
அடிநோக்கி அகற்றும் நல்ல
சிங்கங்கள் அரசியலிற் சிறந்துநிற்பின்
சிறுநரிக்குச் செயலொன் றில்லை;
பங்கஞ்செய் அந்நரிதான் சூழ்ச்சியினாற்
குழப்பிவிடப் பலவுஞ் செய்யும்.

**அரசியலில் பிறர்க்குப் பயன்பட வாழ்தல் பெரியோர் கொள்கை. சிறிய ரெல்லாம் பிறர் பயனைப் பறித்துக் கொண்டு பலவகைத் தீங்கினைப்புரிவர்.**

72 பிறருடைய பெரும்பயனைப் பறித்தல் ஒன்று,
பிறர்தமக்குப் பெரும்பயனைப் புரிதல் ஒன்று
திறமுடைய இவ்விரண்டுள் எதனைச் செய்யத்
தெரிவுபுரி அரசியலில் திகழ்ந்து நிற்பீர்!
உறவுடைய உழைக்கின்ற வாய்மை யாளர்
உலகமக்கள் பயனடைய உறுதி செய்வர்
குறைவுடைய பிறரெல்லாம் கோளால் பொய்யால்
கொலைகளவால் பொருள்திரட்டும் கொடுமை யோரே

நல்லவரின் எண்ணம் நாட்டை நலப்படுத்தும் தீயவரின் எண்ணம் நாட்டை கெடுக்கும். தீயவரிற் சிலர் நல்லவர் போல் நடித்து நல்லவர்களை அரசில் விடாமல் தடுப்பர்.

73 நல்லவர்தம் திருமனத்தே எழுகின்ற எண்ணம்
நானிலத்தை நலப்படுத்தித் தீமையினைப் போக்கும்;
அல்லவர்தம் தீமனத்தே எழுகின்ற எண்ணம்
அவனிதனைப் பாழ்படுத்தி ஆக்கம்அழி விக்கும்;
புல்லர்களும் நல்லவர்போல் மிகநடித்து நாட்டில்
பொருள்பறிக்கும் தொண்டதனைப் புரிந்துமிக வாழ்வர்;
நல்லவர்க்கும் மாசதனைக் கற்பித்துக் கூறி
நணுகவிடார் அரசியலில்; நாட்டுநலம் அழிப்பார்.

தம் சொந்த வேலையைக் கருதாமல் பொதுநலப் பணியை நன்கு செய்து வருபவரைச் சில தன்னலக்காரர் அப்பணியிலிருந்து அகற்றி மகிழ்வர்.

74 எந்த வேலையை எப்படிச்
செய்யலாம் என்பதை நன்கெண்ணிச்
சொந்த வேலையைக் கருதிடா
துழைத்திடும் சுறுசுறுப் புள்ளாரை
அந்த வேலையில் அகற்றியே
முடக்குதல் அவனியின் இழப்பாகும்;
இந்த வேலையைத் தன்னலம்
மிக்கவர் இயற்றியே மகிழ்வாரே.

நாட்டில் பலமக்களெலாம் பசியால் வருந்தி நிற்கச் சிலர் அரசியலிலிருந்து கொண்டு தாமும் தம்குடும்பமும் நன்ருக வாழ்ந்திருப்பர்.

75 பலகோடி மக்களெல்லாம் பசியினுல் வருந்தப்
பாவியரே அரசதனைப் பாழ்படுத்து கின்றீர்
சிலவான மக்களுள உம்குடும்பம் உண்டு
சீரணிக்க முடியாமல் மருத்துவரைத் தேட
நலவாழ்வு வாழ்கின்றிர்; நான்கூரு விடினும்
நாடுங்கால் உர்உளமே நாடோறும் நவிலும்
நிலம்வாழ வாழாதே நீர்மட்டும் வாழ
நினைவுகொளல் பெருங்குற்றம்; தண்டனையும் நேரும்;
அரசியலில் தீயவர்
முற்றும்.

---

73 நணுகவிடார்- அடையவிடார்

## IV அரசியற்கு வேண்டும் நல்ல கருத்துக்கள் :

ஒரு கட்சித்துணையால் தேர்வில் வெற்றி பெற்றுத் தலைமை ஏற்பவர் தேர்விற்குப்பின் எல்லாக் கட்சியினரையும் சமமாக மதித்து அரசியல் நடாத்துவதே அரசியல் நாகரீகம்.

76 கட்சியொன்ருல் வெற்றிபெற்று வேத்தவையில்
அமைச்சராகிக் கழித்து நிற்போர்,
நட்சியுடன் நாட்டிலுள எக்கட்சி
மக்களையும் நண்பாய்க் கொண்டே
எட்சியுடன் நிற்பதுதான் அரசியலின்
நாகரிகம்; இதனை விட்டு
வெட்சிபுனை மறவரைப்போல் வீணுகப்
போரியற்றல் வேண்டாச் செய்கை.

## நாட்டில் உண்மை உழைப்பு வளர வேண்டும்.

77 உழைப்பின் வாரா உறுதியும் உளவோ
எனஉரைத் தனரே இயல்தேர் புலவர்
உலகர் பற்பல உறுதியை வேண்டின்
ஒருமுக மாக உழைத்தல் நன்றே;
ஆனுல்,
உழைக்க விரும்புவோர் உலகிற் சிலரே;
ஒருசிலர்,
களவுத் தொழிலைக் கலையாய்க் கற்றே
பிறர்பொருள் வெளவும் பெற்றியில் நிற்பர்;
ஒருசிலர்,
வஞ்சகந் தனையே நெஞ்சகம் நிறீஇ
ஏமாற்ற லாலே இரும்பொருள் திரட்டுவர்;
ஒரு சிலர்,
வலிமையி னுலே வன்செயல் புரிந்து
மெலியோர் பொருளை மிகவும் பறிப்பர்;
ஒரு சிலர்,
எத்தொழில் செயவும் எண்ண மின்றி
ஈயென இரக்கும் இழிதொழில் செய்வர்;
இங்கனம்,

---

76 எட்சியுடன்-எழுச்சியுடன், வெட்சி-போர்மாலை
77 நிறீஇ-நிறுத்தி

களவு புரிந்தும், வஞ்சனை செய்தும்,
வலிந்து பறித்தும், வாயால் இரந்தும்,
புண்ணிய மிலாமல் பொருளினைத் தேடி
உழைக்க விரும்பார் உலகில் வாழ்வர்;
இவர்தம் செய்கை,
உழைப்பவர் பொருளை உறிஞ்சுத லாகும்;
இதனால்,
பொருள்வளம் சிறக்கப் புரியும் உழைப்பு
நாட்டில் நசுங்கும் நல்குரவு உண்டாம்;
உழைத்துப் பொருள்பெற யாரால் முடியும்?
பிழைச்செயல் புரிந்தால் பெரும்பொருள் கிட்டும்
என்னும் எண்ணமே எவர்க்கும் தோன்றின்
உழைப்பில் மக்கள் உள்ளம் ஒன்றார்.
பொருள்வளர்ச் சிக்கே அடிவே ரான
உண்மை உழைப்பை உலகில் உண்டாக்கும்
உபாயம் எதுவோ? உரைப்பீ ராக;
அதுதான் நிற்க,
வேலை இல்லை; வேலை இல்லை;
கற்றவர் தமக்கு வேலை இல்லைஎன,
எல்லா மக்களும் இயம்பு கின்றனர்;
வேலை என்பது அரசியல் வேலையா?
அரசியல் வேலை ஆயின், அதுதான்
எல்லா மக்கட்கும் எப்படிக் கிடைக்கும்?
உழவு கைத்தொழில் வாணிகம் என்னும்
இவையே வேலை; இவைநடை பெற்றால்
நிலத்தி லிருந்து விளையும் பொருளும்
கைவினைப் பொருளும் கடிதில் உண்டாம்
அரசின் வேலையால் அவைவிளை யாவாம்
அதனால்,
நாட்டு மக்கட்கு நற்பொருள் உதவும்
உழவு கைவினை வாணிகம் தம்மை
நெடுநீர் மறவி மடிதுயி லின்றி
கரவில் லாமல் காசினி புரிய
அரசிய லாளர் ஆவன செய்யின்
வறுமை என்பது நீங்கச்
சிறுமை யுறாமற் சிறக்கும் உலகமென்.

---

நல்குரவு-வறுமை

நாட்டில் உழவு கைத்தொழில் வாணிகம் என்னும் இவை ஓங்கினல் நாட்டின் பொருள் வளம் ஓங்கும்.

78 பண்ணுதற் குரிய உழவுவா ணிகங்கள்
பற்பல கைத்தொழி லன்றி
அண்ணுதற் கரிய அரசியற் பணியை
அனைவரும் விரும்புதல் அழகோ?
மண்ணினிற் சிறிதும் மடிமைமே வாமல்
மாண்புற உழைத்திடும் தொழில்தான்
எண்ணுறும் இவையே, இவைநடந் திட்டால்
ஏற்றமாம் பொருளியற் றுறையே.

சிலர் நாட்டில் வேற்றுமையை விளைவித்து அதில்விளையாடி கலகம் விளைவித்து அமைதியைக் கெடுப்பர். இதனல் அரசியற்குக் கேடு விளையும்.

79 கூற்றுவனும் இதுசெய்யான் எனக்கூறி
மிகவிரங்கக் குலவும் நாட்டில்
வேற்றுமையை மிகவிளைத்து விளையாடும்
தீயவரின் விருப்பத் தாலே
ஆற்றல்மிகு நல்லரசும் அழிவாகும்;
ஆதலினல், அறிவால் மிக்கீர்
ஏற்றமிகு ஒற்றுமையை எப்பாடு
பட்டேனும் என்றும் காப்பீர்.

பொறுப்புணர்ச்சி இல்லாத தீயவர் தம்மிக்க சினத்தால் கடுஞ்சொல் கூறி கலகத்தை உண்டாக்கிக் கொலை முதலானவற்றில் மிக ஊக்கம் காட்டுவர். இது நாட்டின் கலகத்திற்குக் கால்கோளாகும்.

80 பொறுப்பற்ற தீயவரைப் பொங்குகின்ற
சினப்பேய்தான் புகுந்தே ஆட்ட
வெறுப்புற்று விடம்போன்ற வெய்யகடுஞ்
சொற்களையே விரைந்து கூறி,
ஒறுப்புற்ற செயலான உதை அடிகள்
கொலைஇவற்றில் ஊக்கம் கொள்வர்
கறுப்புற்ற இச்செயலே நாட்டிலெழும்
கலகத்தின் கால்கோ ளாகும்.

மாண்பினை மன்னிநிற்கும் மக்கள் வாழ்க.

81 பிறர்வாழ வேண்டுமென்ற பேரெண்ணம்,
இனியமொழி,பிறந்த நாட்டில்
அறம்வாழப் பொருள்வாழ அனைவருமே
இன்பநிலை அடைந்து வாழத்
திறமான செய்கைகளைத் தேர்ந்து கொண்டு
தூய்மையுடன் திட்ப மாக
மறவாமற் செய்கின்ற மாண்பிவைகள்
மன்னிநிற்கும் மக்கள் வாழ்க.

அரசியல் இயக்கம் முற்றும்

---

80 கறுப்பு- கோபம்

---

## பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 7 | 15 | வினைக்கும் | விளைக்கும் |
| 9 | 31 | அரசியிலில் | அரசியலில் |
| 12 | 26 | நல்கு | நல்கும் |
| 13 | 7 | இழுப்ப | இழப்ப |
| 13 | 12 | அணையார் | அனையார் |
| 13 | 29 | ஒட்டிலே | ஏட்டிலே |
| 28 | 6 | அமைச்சராகி | அமைச்சாகி |
| 28 | 6 | கழித்து | களித்து |



சக்தி பிரிண்டர்ஸ், ஈரோடு. போன் : 77175

அன்புநற் பண்பாய், அறம்நலச் செயலாய்
அமைந்திட இயங்குவர் நல்லோர்;
வன்பெனும் பண்பும், தீமைசெய் தொழிலும்
வளர்ந்திட நடப்பவர் தீயோர்;
இன்பினில் உலகம் இருந்திட வேண்டின்,
எவ்வெவர் மனத்திலும் அன்பும்,
முன்புசேர் அறமும், முளைத்திட வேண்டும்;
முளைத்திடின் உலகம்நன் றாமே.

பிறர்நலம் செய்யப் பெருகிடும் அன்பைப்
பெரிதுமே மனத்தனிற் கொள்ளார்
அறநலம் அழிக்கும் ஆசையே வளர
அனைவர்தம் பொருளையும் விரும்பி
மறநிலை வளர்க்கும் மாக்கள்தீச் செயலால்
மாநிலம் துன்புறும் அந்தோ!
திறநிலை யுடைய அரசினர் இதனைத்
தீர்த்திடக் கருதுவ துண்டோ?